செ. வெ. எண்: 354 நாள்: 06.07.2009

## கால்நடை ஆய்வாளர் நிலை–2 நியமனம்

கால்நடை பராமரிப்புத்துறையில் 1883 கால்நடை ஆய்வாளர் நிலை–1 பதவிகளும் 1207 நிலை–2 கால்நடை ஆய்வாளர் பதவிகளும் ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2007–2008–ஆம் ஆண்டில் 425 தகுதியுள்ள அங்கத்தினர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி புதுக்கோட்டை, ஒசூர், ஒரத்தநாடு மற்றும் முகுந்தராயபுரம் பண்ணைகளில் வழங்க ஆணை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒசூர் மாவட்ட கால்நடைப்பண்ணையில் 11 மாதம் கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 107 கால்நடை ஆய்வாளர்களுக்கு பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. 11.6.2009 அன்று கால்நடை ஆய்வாளர் பயிற்சி முடித்த 67 நபர்களுக்கு பணி நியமன ஆணை இன்று வழங்கப்படுகிறது. 31.7.2009 அன்று ஒரத்தநாடு மாவட்ட கால்நடைப் பண்ணையில் பயிற்சி முடிக்கும் 98 நபர்களுக்கும், 4.8.09 அன்று முகுந்தராயபுரம் ஆட்டுப்பண்ணையில் பயிற்சி முடிக்கும் 116 நபர்களுக்கும் ஆகஸ்ட் '09 இறுதிக்குள் பணி நியமன ஆணை வழங்கப்படும். 2008–09 க்கு 237 நபர்களுக்கு கால்நடை ஆய்வாளர் பயிற்சி அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

அரசு ஆணை (எம்.எஸ்)எண்.132, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(காப1)துறை, நாள்–6.10.08–ன் வழி கால்நடை ஆய்வாளர் பயிற்சி நிலையம் பயன்படுத்திகொள்ள வாய்ப்புகள் இருப்பதைப்பொறுத்தும், நிலை–2 கால்நடை ஆய்வாளர் காலியிடங்களைப்பொறுத்தும் ஒவ்வொரு வருடமும் பயிற்சியை நடத்த மற்றும் மருத்துவப்பணிகள் ஆணையருக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே வருங்காலங்களில் கால்நடை ஆய்வாளர் நிலை–2, காலியிடங்களைப்பொறுத்து, கால்நடை ஆய்வாளர் பயிற்சி நடத்தப்பட்டு கால்நடை ஆய்வாளர் நிலை–2 பதவிகள் நிரப்பப்படும். கால்நடை ஆய்வாளர் நிலை–2–ஆகப் பணியில் சேர்ந்தவர்களுக்கு 8 வருட காலம் பணிமுடித்தப்பிறகு தகுதியின் அடிப்படையில் கால்நடை ஆய்வாளர் நிலை–1 ஆக பதவி உயர்வு வழங்கப்படும்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9